(ஒன்பதாவது பாராளுமன்றம் - மூன்றாவது கூட்டத்தொடர்)

**இல. 29.]**

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2022 நவம்பர் 10 வியாழக்கிழமை, மு.ப. 9.30 மணிக்கு

---

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

1515/2022

கௌரவ ஜகத் குமார சுமித்ராரச்சி,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) தற்போது இலங்கையில் நெற் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படும் வயற் காணிகளின் பரப்பளவு எத்தனை ஏக்கர்கள் என்பதையும் நெற் பயிர்ச்செய்கையில் ஈடுபடும் விவசாயக் குடும்பங்களின் எண்ணிக்கை தனித்தனியாக என்தனை என்பதையும்;

(ii) 2015 ஆம் ஆண்டு முதல் 2019 வரையில் நெற் பயிர்ச்செய்கையிலிருந்து விலகியுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) இக்காலப்பகுதியில் நெல் விவசாயிகளுக்கு உர மானியம் வழங்குவதற்காக செலவிடப்பட்டுள்ள நிதித்தொகை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2020 ஆம் ஆண்டில் இலங்கையின் மொத்த உரத்திற்கான தேவைப்பாடு ஒவ்வொரு பயிருக்கும் ஏற்ப வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) 2020 ஆம் ஆண்டில் இரசாயன உரத்தினை இறக்குமதி செய்வதற்காக செலவிடப்பட்டுள்ள நிதித்தொகை மற்றும் இறக்குமதி செய்யப்பட்டுள்ள உரத்தின் அளவு வெவ்வேறாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2.

1525/2022

கௌரவ இஷாக் ரஹுமான்,— பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) இபலோகம பொலிஸ் நிலையத்தைப் பேணிச் செல்வதற்காக நிரந்தரமான கட்டடமொன்று இல்லாமையால் இன்றளவில் அப்பொலிஸ் நிலையத்தைப் பேணிச் செல்வதற்கென "ரணஜயபுர" வீடமைப்புத்தொகுதிக்குச் சொந்தமான வீடுகள் பயன்படுத்தப்படுகின்றன என்பதையும்;

(ii) மேற்படி பொலிஸ் நிலையத்திற்கான ஆளுகைப் பிரதேசமானது 33 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை உள்வாங்குகின்றது என்பதையும்;

(iii) மேற்படி பொலிஸ் நிலையத்துக்கு வழங்கப்பட்டுள்ள உத்தியோகபூர்வ வாகனம் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி பொலிஸ் நிலையத்துக்கென நிரந்தர கட்டடமொன்றை நிர்மாணிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) பொலிஸ் நிலையத்தின் பாவனைக்காக புதியதொரு உத்தியோகபூர்வ வாகனத்தை வழங்குவதற்கான நடவடிக்கையினை மேற்கொள்வாரா என்பதையும்;

(iii) ஆமெனில், குறிப்பிட்ட திகதி யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3.

1673/2022

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன,— தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் தோட்டத்தொழிலாளி ஒருவரின் நாள் சம்பளம் யாதென்பதையும்;

(ii) மேற்படி நாள் சம்பளத்தை 1000/- ரூபா வரை அதிகரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அது தொடர்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா;

(ஆ) இன்றேல், ஏன்?

4.

1896/2022

கௌரவ அஜித் மான்னப்பெரும,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கம்பஹா மாவட்டத்திலுள்ள தேசிய பாடசாலைகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) அவற்றின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) "சுபீட்சத்தின் நோக்கு" வேலைத்திட்டத்தின் கீழ் தேசிய பாடசாலைகளாக மாற்றப்பட்ட பாடசாலைகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iv) அவற்றின் பெயர்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி (அ) (iv) இல் குறிப்பிடப்பட்டுள்ள பாடசாலைகளைத் தெரிவு செய்கையில் பின்பற்றப்பட்ட வழிமுறை யாதென்பதையும்;

(ii) தேசிய பாடசாலைகளாக மாற்றப்படும் பாடசாலைகளுக்கு வழங்கப்படும் வசதிகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5.

2001/2022

கௌரவ ஜே.சீ. அலவத்துவல,— வனசீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குருநாகல் மாவட்டத்திலுள்ள சரணாலயங்கள் மற்றும் காடுகளில் நடமாடித் திரிகின்ற காட்டு யானைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி காட்டு யானைகளிடமிருந்து மக்களையும் அவர்களது சொத்துக்களையும் பாதுகாப்பதற்காக யானை வேலிகளை அமைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், குறித்த ஒவ்வொரு யானை வேலிகளையும் அமைப்பதற்கு எதிர்பார்க்கும் கிராமம், கிராம அலுவலர் பிரிவு மற்றும் பிரதேச செயலகப் பிரிவு என்பன வெவ்வேறாக யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) குறித்த ஒவ்வொரு யானை வேலிகளையும் அமைப்பதற்காக மதிப்பீடு செய்யப்பட்டுள்ள தொகை, நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படும் திகதி மற்றும் நிறைவு செய்யப்படுவதற்கு எதிர்பார்க்கப்படும் திகதி என்பன வெவ்வேறாக யாவையென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

6.

2039/2022

கௌரவ லலித் எல்லாவல,— பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் தலைவர் திரு. ரோஹண விஜேவீர அவர்களை 1989.11.12 ஆம் திகதி அப்போது ஆட்சியிலிருந்த அரசாங்கம் கைது செய்து அது தொடர்பாக ஊடகங்களின் மூலம் வெளிப்படுத்தியது என்பதையும்;

(ii) 1989.11.13 ஆம் திகதி அவர் உயிரிழந்துள்ளார் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) திரு. ரோஹண விஜேவீர அவர்களின் மரணம் இயற்கை மரணமா என்பதையும்;

(ii) இன்றேல், அது ஒரு படுகொலையா என்பதையும்;

(iii) படுகொலை எனின், அது தொடர்பில் இலங்கையின் நீதிமன்றமொன்றினால் வழங்கப்பட்டுள்ள வழக்குத் தீர்ப்பொன்று உள்ளதா என்பதையும்;

(iv) மேற்படி மரணம் தொடர்பில் மக்கள் விடுதலை முன்னணியின் உறுப்பினர் ஒருவர் அல்லது தலைவர் ஒருவர் சட்டரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

7.

2040/2022

கௌரவ வேலு குமார்,— நீர்வழங்கல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கண்டி மாவட்டத்தின், பஹத்த ஹேவாஹெட்ட பிரதேச செயலகப் பிரிவில் வசிக்கும் குடும்பங்களில் குழாய் மூலமான குடிநீர் வசதிகளைக் கொண்டுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி பிரதேச செயலகப் பிரிவில் நிலவும் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

8.

2059/2022

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ,— முதலீட்டு மேம்பாட்டு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) ஹொரண, வகவத்தை டயர் தொழிற்சாலை நிர்மாணக் கருத்திட்டத்திற்கு உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்காக பயன்படுத்தப்பட்ட நிதியங்கள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி தொழிற்சாலைக்கு வழங்கப்பட்டுள்ள மின் இணைப்பானது எத்தனை மெகாவாட் என்பதையும்;

(iii) மேற்படி கருத்திட்டத்திற்கு நீர் விநியோகம் வழங்கப்பட்டுள்ள விதம் யாதென்பதையும்;

(iv) மேற்படி கருத்திட்டத்திற்கான நுழைவுப் பாதையை நிர்மாணிப்பதற்கு அரசாங்கத்தால் செலவிடப்பட்ட பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பரா?

(ஆ) இன்றேல், ஏன்?

9.

2171/2022

கௌரவ ரோஹண பண்டார,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மதவாச்சி, அ/மைத்திரிபால சேனாநாயக்க மத்திய மகா வித்தியாலயம் இன்றளவில் பாரிய பின்னடைவுக்கு உள்ளாகி வருவதனை அவர் அறிவாரா?

(ஆ) ஆமெனில், மேற்படி பின்னடைவினைத் தடுப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதனை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

10.

2519/2022

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இதுவரையில் இலங்கையில் நிறுவப்பட்டுள்ள தேசிய கல்வியியல் கல்லூரிகளின் எண்ணிக்கை யாவை;

(ii) அவற்றின் பெயர்கள் என்ன;

(iii) தேசிய கல்வியியல் கல்லூரிகளில் ஒவ்வொரு மொழி மூலத்திற்கும் ஏற்ப நடத்தப்படும் பாடநெறிகளின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது;

(iv) மேற்படி பாடநெறிகளின் பெயர்கள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கல்வியியல் கல்லூரி ஆசிரியர் பயிற்சிக்காக மாணவர்களின் பற்றாக்குறை காணப்படுவதை அறிவாரா;

(ii) ஆமெனில், மேற்படி பிரச்சினையைத் தீர்ப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்

1.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அலுவல்கள் (இல. 1),— ஒழுங்குப் பத்திரத்தில் காணப்படும் பொது அலுவல்களில் 14 ஆம் இலக்க பிரேரணை மீதான நடவடிக்கைகள் இன்றைய அமர்வில் பாராளுமன்ற நிலையியற் கட்டளை 27 இன் ஏற்பாடுகளிலிருந்து விலக்குப்பெறுமாக.

2.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அலுவல்கள் (இல. 2),— “ஒதுக்கீட்டுச்” சட்டமூலம் (2023) இன் பரிசீலனைக்காக பாராளுமன்ற நிலையியற் கட்டளை 75(1) இல் குறிப்பிடப்பட்டுள்ள "இருபத்தி ஆறு" எனும் சொற்களுக்குப் பதிலாக "இருபது" எனும் சொல்லை இடுவதன் மூலம் இக்கட்டளை தொழிற்படுமாக.

3.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அலுவல்கள் (இல. 3),— 2022 நவம்பர் 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை, 16 ஆம் திகதி புதன்கிழமை, 17 ஆம் திகதி வியாழக்கிழமை, 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை, 19 ஆம் திகதி சனிக்கிழமை, 21 ஆம் திகதி திங்கட்கிழமை மற்றும் 22 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆகிய நாட்கள் “ஒதுக்கீட்டுச்” சட்டமூலம் (2023) இன் பரிசீலனைக்கென ஒதுக்கப்பட்ட நாட்களாகுமாக.

4\.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வுகள் (இல. 1),— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8 இன் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், 2022 நவம்பர் 14 ஆம் திகதி, திங்கட்கிழமை சபை அமர்வு தினமாக இருக்குமாக.

5\.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வுகள் (இல. 2),— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 75(2) இன் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், "ஒதுக்கீட்டுச்" சட்டமூலம் (2023) இன் பரிசீலனைக்கென ஒதுக்கப்பட்ட நாட்களான 2022 நவம்பர் 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முதல் 21 ஆம் திகதி திங்கட்கிழமை வரையிலான நாட்களில் சபை அமர்வு நேரங்கள் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 6.00 மணி வரை இருக்குமாக. பி.ப. 5.30 மணிக்கு பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் 8(5) ஆம் மற்றும் (6) ஆம் பந்திகள் தொழிற்படுமாக. பி.ப. 6.00 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

6\.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வுகள் (இல. 3),— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 75(2) இன் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், "ஒதுக்கீட்டுச்" சட்டமூலம் (2023) இன் பரிசீலனைக்கென ஒதுக்கப்பட்ட தினமாகிய 2022 நவம்பர் 22 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சபை அமர்வு நேரம் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 5.00 மணி வரை இருக்குமாக. பி.ப. 5.00 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

---

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

சிறுகோரிக்கை நீதிமன்றங்களின் நடவடிக்கைமுறை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*2.

நீதித்துறை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*3.

மாகாணங்களின் மேல் நீதிமன்றம் (சிறப்பு ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*4.

குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*5.

கண்டிய திருமண, மணநீக்கம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*6.

நஞ்சுகள், அபின் மற்றும் அபாயகரமான அவுடதங்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*7.

குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*8.

சிறுவர்கள் மற்றும் இளம் ஆட்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*9.

அபாயகரமான விலங்குகள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*10

நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்,— சிறைச்சாலைகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் விதிகள்,— (54 ஆம் அத்தியாயமான) சிறைச்சாலைகள் கட்டளைச் சட்டத்தின் 94 ஆம் பிரிவின் கீழ் நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2022 யூலை 12 ஆம் திகதிய 2288/15 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப் பட்டதும் 2022.10.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான விதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*11.

கடற்றொழில் அமைச்சர்,— கடற்றொழில், நீர்வாழ் உயிரினங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 1),— 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில், நீர்வாழ் உயிரினங்கள் சட்டத்தின் 61 ஆம் பிரிவின் கீழ் கடற்றொழில் அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2021 நவம்பர் 24 ஆம் திகதிய 2255/22 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.09.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*12.

கடற்றொழில் அமைச்சர்,— கடற்றொழில், நீர்வாழ் உயிரினங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 2),— 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில், நீர்வாழ் உயிரினங்கள் சட்டத்தின் 64(அ) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 61(1)(ஆ) ஆம் பிரிவின் கீழ் கடற்றொழில் அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2022 பெப்ரவரி 07 ஆம் திகதிய 2266/6 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.09.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*13.

கடற்றொழில் அமைச்சர்,— கடற்றொழில், நீர்வாழ் உயிரினங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 3),— 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில், நீர்வாழ் உயிரினங்கள் சட்டத்தின் 61 ஆம் பிரிவின் கீழ் கடற்றொழில் அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2022 ஏப்ரல் 25 ஆம் திகதிய 2277/04 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.09.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*14.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— அத்தியாவசிய பொதுச் சேவைகள் சட்டத்தின் கீழ் தீர்மானம்,— 1979 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க, அத்தியாவசிய பொதுச் சேவைகள் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதி அவர்களுக்கு கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய, 2022 நவம்பர் 03 ஆம் திகதிய 2304/51 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் மற்றும் அதன் அட்டவணையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.11.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான பிரகடனம் அங்கீகரிக்கப்படுமாக.

*15.

ஒதுக்கீட்டுச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*16.

சேர்பெறுமதி வரி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*17.

உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*18.

விலங்கின நலம்பேணல் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*19.

புனர்வாழ்வுப் பணியகம் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*20.

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 126 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 237 ஆம் பிரிவின் கீழ் போக்குவரத்து அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2022 மார்ச் 31 ஆம் திகதிய 2273/76 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.08.29 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*21.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2022 செப்டெம்பர் 09 ஆம் திகதிய 2296/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.10.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

22.
சர்வதேச லயன்ஸ் கழகம் மாவட்டம் 306ஏ-தேசிய அபிவிருத்தி மன்ற நம்பிக்கை நிதியம் (கூட்டிணைத்தல்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

23.
சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்தல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

24.
புகையிலை வரி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

25.
வைட் றோஸ் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

26.
ரொசான் ரணசிங்க ஜனசஹன மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

27.
மனித உரிமைகள் அமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

28.
சிவில் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

29.
சமாதானம், கல்வி வலுவூட்டல் மற்றும் அபிவிருத்தியிற்கான விளையாட்டு நிறுவகம் (SPEED) (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

30.
இலங்கை பட்டயப் போக்குவரத்து நிறுவனம் (கூட்டிணைத்தல்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

31.
அவசரகால பொதுச் சுகாதாரச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

32.
ஸ்ரீ பாலாபிவூர்தி வர்தன சமிதிய (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

33.
சமாதி சமூக அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

34.
கிழக்கு மீளெழுச்சி அமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

35.
இலங்கை ஐக்கிய கிறிஸ்தவ நட்புரிமை (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

36.
இலங்கை பட்டயக் கப்பற் தரகர்கள் நிறுவனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

37.
சமாதி சுகாதார சேவைகள், சுற்றாடல், விவசாய, கலாசார மற்றும் விளையாட்டு நிலையம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

38.
தென்னிலங்கை மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தலைமைத்துவப் பயிற்சிபீடம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

39.
சஹன சமுதாய அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

40.
சமாதி தியான மன்றும் யோகாசன நிலையம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

41.
றுஹுணு உதானய அமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

42.
"மாத்தறைப் பருவம்" அமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

43.
ரதன திஸ்ஸ சமாதான மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

44.
இலங்கை காப்புறுதி நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

45.
ஷைலி கல்விசார் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

46.
விவாக (பொது) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

47.
முஸ்லிம் திருமணம், மணநீக்கம் (நீக்கம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

48.
களனி பௌத்த மகளிர் தருமச் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

49.
தஸ்ஸனா பௌத்த சன்விதானய (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

50.
இந்திரா புற்றுநோய் நம்பிக்கைப் பொறுப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

51.
இலங்கை பிளாஸ்டிக் மற்றும் இறப்பர் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.